புதுச்சேரி அரசு
வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை
கூடுதல் வேளாண் இயக்குநர் (தோட்டக்கலை),அலுவலகம்
தாவரவியல் பூங்கா, புதுச்சேரி.

எண்.12/கூவேஇ(தோ.)/வே.அ(கா)/2020-21/467 தேதி:20.07.2020

## செய்திக் குறிப்பு

புதுச்சேரி அரசு வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை, கூடுதல் வேளாண் இயக்குனர் (தோட்டக்கலை) அலுவலகம் மூலம் 2020-21 வருடத்திற்கான **ஆடிப்பட்டத்தில்** பயிரிடப்பட்ட பழவகை மரங்கள், வாழை, பூக்கள், மற்றும் காய்கறிகளுக்கான **"சாகுபடிக்கான மானியம்"** பெறுவதற்கான விண்ணப்பங்கள் தோட்டக்கலை விவசாயிகளிடமிருந்து வரவேற்கப்படுகிறது.

இந்த விண்ணப்பங்களை விவசாயிகள் தங்கள் பகுதிக்குட்பட்ட உழவர் உதவியகத்தில் வரும் **20.07.2020** முதல் பெற்றுக்கொள்ளலாம். மேலும் விண்ணப்பங்கள் வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை இணையதளத்திலும் **(https://agri.py.gov.in)** பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்த விண்ணப்பங்களை தங்கள் எல்லைக்குட்பட்ட உழவர் உதவியகத்தில் வரும் **31.08.2020** தேதிக்குள் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

(மு. வேதாசலம்)
வேளாண் கூடுதல் இயக்குநர் (தோட்டக்கலை)